மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.205/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரிமுத்து | தொழில் | |
| தகப்பனார் பெயர் | முத்துசாமி | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 30.3.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.3 | | |

இன்று 30.3.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் சூரப்பள்ளி கிராமத்தில் தலைவராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 2 ஆண்டுகளாக தலைவராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள கதவு எண்.7–30 யார் பெயரில் உள்ளது என்றால் வெங்கட்ராமன் மகன் மாரியப்பன் பெயரில் உள்ளது. நான் சூரப்பள்ளியை சார்ந்தவரா என்றால் ஆமாம். கதவு எண்.7–30 உள்ள வீடு என்ன வீடு என்றால் ஓட்டு வீடு. அந்த வீடு தற்போது நிலையில் உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீட்டிற்கு 2013 முதல் தற்போதுவரை உள்ள வரிவிதிப்பிற்கான ஆவணங்கள் உள்ளது. வா.சா.ஆ.3 ரசீதுகள் எங்களது அலுவலகத்தில் வழங்கப்பட்டது என்றால் ஆமாம். கதவு எண்.7–30ல் உள்ள வீட்டை எப்போது பார்த்தேன் என்றால் அழைப்பாணைக்கு பின்னிட்டு பார்த்தேன். யார் அதில் குடியிருக்கிறார்கள் என்றால் யாரும் குடியிருக்கவில்லை. பூட்டி உள்ளது. அந்த வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தால் பூட்டி சென்றிருக்கலாம் என்றால் ஆமாம். வீட்டில் குடியிருந்தால் தான் பார்வையிட்டு வரிவிதிப்போம் என்றால் வீடு கட்டியிருந்தாலே வரிவிதிப்போம். கதவு எண்.7–30க்கு மாரியப்பன் பெயரிலுள்ள வரிவிதிப்பு 2013 முதல் 2022வரை என்பதை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1வரிசை, 2013க்கு முன்பு உள்ள வரிவிதிப்பு எங்கு இருக்கும் என்றால் நங்கவள்ளி யூனியன் அலுவலகத்தில் இருக்கும்.

குறுக்கு விசாரணை

7 என்பது வார்டை குறிக்குமா என்றால் ஆமாம். சா.சா.ஆ.1ல் 7 என்பது வார்டு

என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பூசாரிதாசன் வளவு என்றால் ஆமாம். பூசாரிதாசன் வளவில் மொத்தம் எவ்வளவு வீடுகள் இருக்கும் என்றால் 40 வீடுகள் இருக்கும். கதவு எண்.7−30 என்பது பூசாரிதாசன் வளவை சார்ந்தது என்றால் ஆமாம். சா.சா.ஆ.1ல் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். சா.சா.ஆ.1ல் உள்ள 2வது பக்கத்தில் வெங்கட்ராமன் என்கிற இடத்தில் அச்சாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வெங்கட் என்பது ஒரு பேனாவிலும், ராமன் என்பது வேறு பேனாவிலும் திருத்தப்பட்டுள்ளது என்றால் அழுத்தி எழுதப்பட்டுள்ளது. அதற்கடுத்துள்ள 6 என்கிற எழுத்துக்கள் தொடர்ச்சி அழுத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கதவு எண்.34 முனியப்பன் மனைவி சுசீலா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் இருந்த நபரை காண்பித்து சுசீலாவா என கேட்டதற்கு ஆமாம் என சாட்சியம் அளிக்கிறார். சுசீலாவும் பூசாரிதாசன் வளவில் தான் உள்ளார் என்றால் ஆமாம். வீட்டுவரி விதிப்பதற்கு முன்பு அந்த அடிநிலத்தின் பட்டா மற்றும் புலவரைபடம் பெற்றதற்கு பின்னிட்டு தான் வரிவிதிக்கப்படும் என்றால் ஆமாம். கதவு எண்.7−30க்கு பட்டா மற்றும் வரைபடம் உள்ளதா என்றால் 10வருடத்திற்கு முன்பு வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளது. நான் 2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். அந்த ஆவணத்தை நான் எடுத்து வரவில்லை. கதவு எண்.7−30க்கான பட்டா மற்றும் வரைபடம் அலுவலகத்தில் உள்ளதா என்றால் இல்லை. சூரப்பள்ளியிலிருந்து நரியம்பட்டிக்கு செல்லும் வழியானது எங்களது கிராமத்தை சார்ந்தது என்றால் ஆமாம். கதவு எண்.7−30க்கான வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். சூரப்பள்ளியிலிருந்து நரியம்பட்டிக்கு செல்லும் ரோட்டு ஓரத்தில் தான் மாரியப்பன் என்பவர் தறி போட்டு குடியிருந்து வருகிறார் என்றால் அங்கும் ஒரு வீடு உள்ளது.

ஒப்பம்/−எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.